**தலைப்பு 123 – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 123 – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 24 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 7,803.08 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 7,732.44 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 70.64 மில்லியன் அதாவது 0.9 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,208.33 | 1,176.31 | 32.02 | 2.6 |
| மூலதனம் | 6,594.75 | 6,556.13 | 38.62 | 0.6 |
| மொத்தம் | 7,803.08 | 7,732.44 | 70.64 | 0.9 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 12301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12.00 | 9.80 | 4.00 | 5.78 | 75.00 | 26.42 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழான 6000/0000/00/0013/0071/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 0.17 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.2 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | நிதிப்பிரமாணம் 94(1) | 1,471,160 | 08 செலவின விடயங்களின் நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| | 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 7/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 1,718,087 | சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டாய சேமிப்புக்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை |

### 3.3 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவினம | | தாமத்திற்கான காரணங்கள் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா. மில்லியன் | | | ரூபா. மில்லியன் | % | |
| மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டம் | 1,125 | 2016.01.16 | 2016.12.31 | 1,079 | 6 | பொருத்தமான காணியை இனங்காணல், அளவிட்டு நடவடிக்கைகள் மற்றும் உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் போன்ற ஆரம்ப நடவடிக்கைகளுக்காக கூடிய காலம் எடுத்தமை |
| மணலாறு மீள்குடியேற்ற வீடமைப்பு செயற்திட்டம் | 350 | 2016 பெப்ரவரி | 2016.12.15 | 311 | 4 | ஆரம்ப வேலைகளுக்கு கூடிய காலம் எடுக்கப்பட்டமை. |
| விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 3,704.05 | 2016.01.30 | 2016.12.25 | 3,785 | 69 | நலனாளிகளை தெரிவு செய்வதற்கு கூடிய காலம் எடுத்தமை |
| பழைய வீடமைப்பு முறைமை புனரமைத்தல் | 240 | 2016.01.01 | 2016.12.30 | 240 | 33 | ஒப்பந்தத்தை இரத்துச் செய்து புதிய ஒப்பந்தக்காரருக்கு வழங்குவதற்காக கூடிய காலம் எடுத்தமை |

**3.4 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு முரணான செயற்பாடுகள்**

கீழே காட்டப்பட்ட செயற்திட்டங்கள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) கிருலப்பனை நுககஹபுர செயற்திட்டம்.

(ii) நடுத்தர வருமானமுடையோர்களின் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டம்.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 20 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 109 | 86 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 47 | 06 |
| | மொத்தம் | 193 | 155 | 38 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

38 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அதிகாரசபை, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர மக்கள் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களிலிருந்து சம்பளம் செலுத்தப்படும் 27 உத்தியோகத்தர்கள் 2007 திசெம்பர் முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியில் அவ்வப்போது அமைச்சின் கடமை செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்